# இன்பவல்லி

★

நாடகம்

டி. கே. எஸ். சகோதரர்களுக்கு
அன்பளிப்பு
23/7/47

விருத்தி சங்க

பால ஷண்முகானந்த

ப. நீலகண்டன்

# இசைவாணன்

★

இலக்கியச் சுவை ததும்பும்
நாடகம்

★

ப. நீலகண்டன்

வ[illegible]வில் வெளிவருகிறது

# சிற்பியின் கவு[illegible]

★

கலைநுட்பம் செறிந்[illegible]
கதைகள்

★

'மாறன்'

மணி வெளியீடு 5. பதிப்பாளர் : தி. சி. கு.

# இன்பவல்லி

(கற்பனை நாடகம்)

ஆசிரியர் :
ப. நீலகண்டன்

காமராசர் பல்கலைக்கழகம்
ஔவை
நூலகம்

மணி மன்றம்
தமிழ்நூல் வெளியீட்டகம்
மதுரை ரோடு : : திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு — விய, பங்குனி (மார்ச் 1947)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

இந்த நாடகத்தின் எல்லா உரிமைகளும் ஆசிரியரைச் சேர்ந்தவை. இந்த நாடகத்தை மேடையில் நடிக்கவோ, அல்லது திரைக்குக் கொண்டுவரவோ விரும்புகிறவர்கள் ஆசிரியரின் முன் அனுமதி பெறவேண்டும்.

•

விலை ரூ. 1-0-0

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 242
நன்கொடை எண்: 242

(பதிப்புரிமை)

சிட்டி பிரஸ், மதுரை ரோடு,
திருச்சிராப்பள்ளி.

# முன்னுரை

சென்ற ஆண்டு திருச்சி வானொலி நிலையத்தி லிருந்து ஒலி பரப்பப்பட்ட இந்த நாடகத்தைப் புத்தக உருவில் வெளியிட வேண்டுமென்று அன்பர் **தி. சி. குழந்தை வேலன்** அவர்கள் விரும்பினார்கள்.

இடையிடையே இன்னும் பல நிகழ்ச்சிகளைச் சேர்த்து மேடை நாடகமாக இன்பவல்லியை வெளி யிட வேண்டுமென்பது என் விருப்பம். எனினும், விரைவில் வெளியிட வேண்டுமென்ற அன்பரின் ஆர்வம் காரணமாக இப்பொழுது இன்பவல்லி இச் சிறு வடிவிலேயே வெளிவருகிறாள்.

வானொலியில் ஒலி பரப்பப்பட்டதற்குப் பின் இதில் ஆங்காங்குச் சில திருத்தங்கள் செய்யப்பட் டுள்ளன.

அன்பர் திரு. தி. சி. கு. அவர்களின் ஆர்வத் திற்கும், மணி மன்றத்தாரின் தமிழ்ப் பணிக்கும் என் நன்றி.

காரைக்குடி
25—3—'47.

**ப. நீலகண்டன்**

# அறிமுகம்

| | |
|---|---|
| பாண்டியன் | ... பாண்டி நாட்டு அரசன். |
| சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறை | ... சேர நாட்டு அரசன். |
| நெடுமாறன், வில்லவன் | ... பாண்டியனின் நண்பர்கள். |
| மதிவாணர் | ... சேரனுடைய அமைச்சர். |
| பாண்டிமா தேவி | ... பாண்டியனின் தாய். |
| இன்பவல்லி | ... (நாடகத்தலைவி) பாண்டியன் மனத்தைக் கெடுக்கச் சேரனால் அனுப்பப்பட்ட ஒரு நாட்டியக்காரி; பாண்டியனைக் காதலித்தவள். |
| சுந்தரி | ... இன்பவல்லியின் தோழி; சேரனால் பாண்டி நாட்டுக்கு அனுப்பப்பட்டவள். |
| குமாரி | ... பாண்டியன் தங்கை; இன்பவல்லியும் சுந்தரியும் செய்த சூதை அறிந்து வெளிப் படுத்த முயன்றவள். |

மற்றும் புலவர், சேனாதிபதி, பாண்டியனுடைய அமைச்சர், வேலைக்காரர் முதலியோர்.

நாடகம் நிகழுமிடம்:

பெரும்பான்மை பாண்டிநாடு

சிறுபான்மை சேரநாடு.

—:—

# இன்பவல்லி

## காட்சி 1

கலா மண்டபம் :

[பாண்டிய மன்னனும் அவனுடைய நண்பர்களான நெடுமாறனும், வில்வலனும் உட்கார்ந்திருக்கின்றனர். நாட்டியம் நடந்துகொண்டிருக்கிறது. சேவகன் மூவருக்கும் மதுவை ஊற்றிக் கொடுத்துக்கொண்டிருக்கிறான். நாட்டியம் முடிந்ததும் நாட்டியக்காரி ஒருபுறமாக நிற்கிறாள்.]

**பாண்டியன் :**—ஆகா ! எவ்வளவு மதுரமாக இருக்கிறது.

**நெடுமாறன் :**—அதனால்தான் இதற்கு மது என்று பெயர் வைத்திருக்கிறார்கள் !

**பாண்டியன் :**—நாட்டியக்காரி எங்கே ?

**நாட்டியக்காரி :**—இதோ இருக்கிறேன் பிரபு.

**பாண்டியன் :**—வில்வலன் கோதை !

**வில்வலன் :**—ஏன் அரசே !

**பாண்டியன் :**—இன்று நாட்டியம் வெகு அற்புதம் அல்லவா ?

**வில்வலன் :**—ஆம் பிரபு.

**பாண்டியன் :**—நெடுமாரு! எப்படி?

**நெடுமாறன் :**—ஆம் பிரபு! அறியாமலா, நாட்டியத்தைக் கலைகளின் சிகரமெனச் சொல்லுகிருர்கள்?

**பாண்டியன் :**—சரியாகச் சொன்னுய், நண்பா! நாட்டியம் இன்னும் சிறிது நேரம் நடக்கட்டுமே!

**நெடுமாறன் :**—அப்படியே பிரபு!

[மறுபடியும் நாட்டியம் நடந்து முடிகிறது.]

**பாண்டியன் :**—நாட்டிய ராணி! நீ ஊற்றிக்கொடு இந்த மதுவை.

[நாட்டியக்காரி மதுவை ஊற்றிக் கொடுக்கிருள்.]

**பாண்டியன் :**—பெண்ணே! வளையல்களின் கிண்கிணி ஒலியோடு, உன் செங்காந்தள் கரத்தால், புன்முறுவல் தவழ நீ மதுவை ஊற்றிக் கொடுக்கும்போது இந்த மது புதுமையான சுவையைப் பெற்றுவிடுகிறது. நீயும் சிறிது பருகு.

[நாட்டியக்காரியும் ஊற்றிக் குடிக்கிருள்.]

**நாட்டியக்காரி :**—பிரபு! ஆகா என்ன ருசி. ஆனந்தம், இன்பம் என்றெல்லாம் சொல்லுகிருர்களே, அவை இந்த மதுவின் ஒரு துளியில் கிடைக்கின்றன, ஸ்வாமி!

**பாண்டியன் :**—பெண்ணே! உடலின் அணு ஒவ்வொன்றிலும் புகுந்து உத்வேகத்தைக் கிளப்பி உள்ளம் பூரிப்படையச் செய்யும் சக்தி மது ஒன்றுக்குத்தான் உண்டு.

**வில்வலன் :**—இதுவே பேரின்பம் அரசே!

**நெடுமாறன் :**—உண்மை! இன்பத்தைத் தேடிச் சிலர் எங்கேயோ போகிறார்களே. அவர்கள் உண்மையை உணராதவர்கள். மங்கையரின் மையலிலும், மது வின் மயக்கத்திலும்தானே இன்பம் இருக்கிறது!

**பாண்டியன் :**—உன் தளிர்க் கரங்களால் நீ அள்ளி வழங்கிய அமுதப் பிரவாகமான மது உடலைப் பேரின்ப வாரிதியில் ஆழ்த்துகிறது. சிறிது செவிக்கும் இன்பம் வழங்கு.

**நெடுமாறன் :**—நல்ல யோசனை பிரபு.

[நாட்டியக்காரி பாடுகிறாள்.]

**பாண்டியன் :**—ஆகா! பாடகி! உனக்கு என்ன வேண் டும் கேள், கொடுக்கிறேன்.

**நாட்டியக்காரி :**—பாண்டிய மன்னனின் அன்புக்குப் பாத்திரமானவள் என்ற பெருமையொன்றே எனக் குப் போதும் பிரபு.

[புலவர் மூன்றுரையார் வேகமாக வந்து நிற்கிறார்.]

**பாண்டியன் :**—யார்?

**புலவர் :**—பாண்டியா? உன் கருத்தை மறைத்த திரை கண்களையும் மறைத்துவிட்டது போலும்!

**பாண்டியன் :**—புலவர்.........

**புலவர் :**—ஆம், உன் அவைக்களப் புலவன்தான். பாண்டியா! பார்க்கச் சந்தர்ப்பமில்லை என்று

சொல்லி அனுப்பினுய்?......பாண்டிய வம்சத்தின் பரம்பரையில் புலவனைக் காணக் காவலனுக்குச் சந்தர்ப்பமில்லாமற் போனதுண்டா?

பாண்டியன் :—புலவரே!.........

புலவர் :—ஆ! இதென்ன காட்சிகள்! நான் வழி தவறி வந்துவிட்டேனே?

நெடுமாறன் :—ஏன்? மன்னனைக் காணத்தானே வந்தீர்கள்?

புலவர் :—அரசனின் கலா மண்டபத்திலிருந்தா கடுஞ் சொற்களும், நாசியைத் துளைக்கும் நாற்றமும்?

வில்வலன் :—போர்க்களத்திலே புலால் நாற்றம் வீசுவது இயற்கைதானே? மலருள்ள இடத்தில் மணம் இல்லாதிருக்குமா?

புலவர் :—பாண்டியா! மாட்சிமைமிக்க மணி மகுடம் சூடிய நீ, நாட்டை ஆட்சி செய்ய வேண்டியிருக்க உன்னை ஆட்சி செய்கிறது மது. உன்னுடைய பொறுப்பற்ற தன்மையினுல் உன் தந்தையின் பெயருக்கு எத்தகைய களங்கத்தை ஏற்படுத்துகிருய் என்றறிவாயா? லட்சியப் பாதையை நோக்கிச் செல்லவேண்டிய உன் வாழ்க்கை.........

பாண்டியன் :—புலவரே! வாழ்க்கை பல கிளைகள் கொண்ட நதி.

நெடுமாறன் :—ஆம், அது ஒரு வழியில்தான் ஓடுமென்று எதிர்பார்க்க முடியாது.

புலவர் :--பொன்னையும், மணியையும், சந்தன மரங்களையும் அடித்துக்கொண்டுவந்த அந்த நதி சேறும் சகதியுமாக மாற இடங்கொடுத்துவிட்டாயே!

பாண்டியன் :—அந்தச் சேற்றில் விளைந்த செந்தாமரையில் அமர்ந்து தேனைக் குடித்த வண்டு மந்தமாருதத் தென்றற் காற்றிலே வெறிகொண்டு தள்ளாடுவதில் வியப்பில்லை.

வில்வலன்:—சந்தர்ப்பம் தெரியாது உள் நுழைந்து நீங்கள் சாத்திரம் பேசுவதுதான் வியப்பாயிருக்கிறது.

புலவர் :—ஆம்......உங்கள் வார்த்தையும் சூழ்நிலையும் நான் இப்பொழுது இங்கு வந்ததை மட்டும் தவறு என்று சொல்லவில்லை.........!

நெடுமாறன் :—.........இனிமேலும் இங்கு வருவது தவறு என்று அறிவிக்கின்றனவோ?

புலவர் :—பாண்டியா! போகிறேன்........பாண்டியா! தமிழ்ச் சங்கம் தோன்றிய இடம் இது. நீதி வழுவாத மன்னர்கள் ஆண்ட இடம் இது. குடிகளுக்காகவே கோலேந்திய கொற்றவர்கள் மரபில் தோன்றிய நீ, கல்விக்கும் கலைக்கும் உழைக்க வேண்டிய மன்னனாகிய நீ, மக்களின் முன்னேற்றம் ஒன்றையே சிந்திக்கவேண்டிய பொறுப்புடைய நீ, ஆட்சி பீடத்தைக் களியாட்ட மந்திரமாக்கி வெறி ஆட்டம் ஆடுகிறாய்!

[புலவர் விரைந்து செல்கிறார். மன்னனும் நண்பர்களும் கேலியாக நகைக்கின்றனர்.]

திரை.

## காட்சி 2

பாண்டிமாதேவியின் அந்தப்புரம் :

[பாண்டிமாதேவியும் அமைச்சரும் அமர்ந் துள்ளனர்.]

**தேவி :**—தமிழ்க் கன்னிக்குப் புத்தம் புதிய அணிகலன் களைச் சூட்டிய இந்தப் பாண்டி நாட்டின் மன்னனா ........என் மகனா........அவைக்களப் புலவரை எள்ளி நகையாடுவது ?

**அமைச்சர் :**—தேவி !

**தேவி :**—அவர் உள்ளம் நோவது தமிழ் அணங்கின் உள்ளம் புண்படுவதைப் போன்றதல்லவா? அவர் எவ்வளவு மனம் கசிந்து என் குமாரனின் நடத் தையை எடுத்துரைத்தார். அவருடைய சொற்கள் கல்லில் கீறிய கோடுகள்போல் என் உள்ளத்தில் படிந்து துன்பப் படுத்துகின்றன.

**அமைச்சர் :**—தேவி! வருந்தவேண்டாம். விரைவில் நம் முயற்சி அரசர் வாழ்வை மாற்றி யமைத்துவிடும்.

**தேவி :**—அமைச்சரே! என் கணவர் இறந்த உடனேயே நானும் மடிந்து போகாததற்குக் கார ணம், நெடுஞ்செழியனுக்கு நான் செய்யவேண்டிய கடமைகளில் குறைவேற்பட்டு விடக்கூடாதே என்பதுதான். அவன் தமிழ் மூவேந்தர்களில் முன்னேன் என்று மக்கள் பாராட்டும் நிலையை அடையவேண்டுமென்ற ஆவலோடு அரச பீடத்

தில் அமர்த்தினேன். கடமை யாற்றவேண்டிய அவன் கயவர் வசப்பட்டுக் கருத்தழிந்து நிற்கிறான். என் குமாரன் எப்படியெல்லாம் கீர்த்தியுடன் விளங்க வேண்டுமென்று பெருமிதத்துடன் கனவு கண்டு கொண்டிருந்தேனோ அதை அடியுடன் குலைத்துவிட்டான்.

அமைச்சர் :—இவ்வளவு இளமையில் இப்படியொரு சூழ்நிலை மன்னரைப் பற்றிக்கொண்டது வியப்பா யிருக்கிறது. உலகத்தின் தலைவாயிலில் காலை வைத்து முன்னேறவேண்டிய அவர் தவறிப்போய் உள்ளே இருக்கும் படுகுழிகளில் விழுந்துவிட்டார்.

தேவி :—அமைச்சரே! என் மைந்தன் அந்தகாரத்திலே மூழ்கி அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்க வேண்டியதுதானா? அவனைத் தடுக்கவே முடியாதா? அவன் இதயத்திலே ஒளி உண்டாக்க ஒரு வழியும் இல்லையா?

அமைச்சர் :—மற்றவர்களுடைய உபதேசத்தைக் கேட்டுச் சீர்திருந்திவிடுகிற நிலையில் அவர் போக்கு இல்லை......ஒரு நன்மையான காரியம் நடக்கட்டும் என்பதற்காக அவருடைய கசப்பு உணர்ச்சியையும் ஆத்திரத்தையும் கூடப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் அவமரியாதையைச் சகிக்க முடியாது தேவி! நீங்களும் அவருக்கு நேரடியாக நீதிகளை எடுத்துச் சொல்லித் திருத்திவிட முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. அம்முயற்சி விபரீத பலனை அளித்தாலும் அளிக்கலாம். ஆகவே.........

தேவி :—இதற்கு மாற்றம்?

அமைச்சர் :—ஒருவேளை..... ...

தேவி :—என்ன ?

அமைச்சர் :—திருமணத்திற்கு ஏற்பாடு செய்தால்? அச்சம்பவம் அவர் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்காதா ?

தேவி :—ஹூம்.

அமைச்சர் :—நான் வருகிறேன்.

தேவி :—சரி.

திரை

## காட்சி 3

சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் ஆலோசனை மண்டபம் :

[சேரனும், சேனாதிபதியும், அமைச்சர் மதிவாணரும் அமர்ந்துள்ளனர்.]

சேரன் :—பாண்டி நாட்டின் புகழ் நாடெங்கும் பரவி வருவதைக் கேட்டீர்களா?

சேனாதிபதி :—பாண்டிய நாட்டின் ஆட்சி முறையைப் பற்றி நம் நாட்டினருமல்லவா புகழ்ந்து பேசுகிறார்கள்!

மதிவாணர் :—இந்தப் புகழுக்குக் காரணமாய் விளங்குபவர் பாண்டிமாதேவி அரசே!

சேரன் :—ஆம். அவளே! இந்தச் சேரனை அவமதிப்பதாக அவள் எண்ணம் போலும்!

சேனாதிபதி :—தமிழ்ச் சங்கமாம்! புலவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து ஆராய்ச்சி செய்யச் சொல்லியிருக்கிறார்களாம்!

சேரன் :—ஹ ஹ! அந்தப் புலவர்கள் அவர்களைப் பற்றி ஊர் முற்றும் புகழ்வதிலே என்ன வியப்பு?

சேனாதிபதி :—இப்பொழுதெல்லாம் நிர்வாக அதிகாரிகளை ஆட்சி பீடத்திலிருந்து நியமிப்பதில்லையாம். குடவோலை மூலமாகப் பொதுமக்களே தேர்ந்தெடுக்கிறார்களாம்!



2

**சேரன் :**—ஆம். இப்படி அவர்கள் செய்யும் தவறுகள் பல. ஏழைகளுக்குத் தரிசு நிலங்களை விநியோகம் செய்வதாம்! நிலங்களை உழுது பண்பட்டுப் பயன் கிடைக்கும் காலம் வரை வரி கிடையாதாம்!

**சேனாதிபதி :**—இதுதான் அரசாங்க முறையின் அழகு!

**சேரன் :**—பெண்ணின் மேற்பார்வையில் ஆட்சி நடக்குமானால் இப்படிப்பட்ட தவறுகள் நடப்பது இயற்கைதானே?

**சேனாதிபதி :**—இந்த ஆட்சி முறையைத்தான் புலவர்களும் பாமரர்களும் புகழ்ந்து பேசுகிறார்கள்!

**சேரன் :**—இந்தப் புகழ்மொழிகளை இனியும் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

**சேனாதிபதி :**—பாண்டியனைப்பற்றி இனி யாரும் புகழ்ந்து பேசக்கூடாதென்று ஒரு உத்திரவிட்டால் என்ன பிரபு?

**சேரன் :**—செய்யலாம். மதிவாணரே! ஏன் மௌனமாயிருக்கிறீர்?

**மதிவாணர் :**—அரசே சேனாதிபதி சொல்வது போன்று தாங்கள் ஒரு உத்தரவைப் பிறப்பித்தால் என்ன நடக்கும் தெரியுமா? இப்பொழுது பாண்டி நாட்டைப் புகழ்ந்து மட்டும் பேசுகிறார்கள். பிறகு தங்களை நிந்தித்துக்கொண்டே அவனைப் புகழ்ந்து பேசுவார்கள்!

சேனாதிபதி :—சட்டம் என ஒன்று இல்லையா? நடவடிக்கை எடுத்துக் கடுமையாகத் தண்டிக்க ஆரம்பித்தால் நிந்திப்பதாவது, புகழுவதாவது.

[கேலியாகச் சிரிக்கிறான்.]

சேரன் :—மதிவாணரே! பயப்படுகிறீரா?

மதிவாணர் :—ஆம் அரசே! நியாயத்திற்கும் நீதிக்கும் புறம்பாகப் போக அஞ்சுகிறேன் என்று சொல்ல வெட்கப்பட வேண்டியதில்லை. பொதுமக்களைக் கிள்ளுக்கீரை என்று நினைத்துவிட வேண்டாம். மக்களின் இந்தச் சாதாரண உரிமையை அரசன் என்ற அதிகார பலத்தினால் பறிக்க நினைப்பது அடாத செய்கையாகும். அரசே! தாங்கள் தவறான வழிக்கு இழுத்துச் செல்லப்படுவீர்களோ என்று அஞ்சுகின்றேன்.

சேரன் :—மதிவாணரே! நீர் சொல்லும் வழிதான் என்ன?

மதிவாணர் :—ஏன், நாமும் மக்களின் அன்பைப்பெற முயற்சிக்க வேண்டியதுதான்.

சேரன் :—ப்பூ! இவ்வளவுதானா? ஏதோ புது யோசனை அல்லவா சொல்லப்போகிறீர் என்று பார்த்தேன்!

சேனாதிபதி :—பிரபு! மதிவாணர் சொல்வதைப் போல் செய்தால் பாண்டி நாட்டாரைப் பார்த்துத்தான் நாமும் இப்படிச் செய்வதாக எண்ணி மக்கள் கேலி செய்வர். அரசே! இன்னொரு விஷயம்......

சேரன் :—என்ன ?

சேனுதிபதி :—சமீபத்தில் பட்டமேற்றிருக்கும் பாண்டியன் நிர்வாகக் காரியங்களில் கவனம் செலுத்தாது கேளிக்கைகளில் பொழுதைக் கழிக்கிறுன்.

சேரன் :—ஆம்.

சேனுதிபதி :—அதன் காரணமாக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டான்.

சேரன் :—ஆம், நானும் கேள்விப்பட்டேன். என்னுடைய நெடுநாளைய திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள இதுவே சரியான சந்தர்ப்பம். அவனுடைய பலஹீனமான நிலையை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இன்பவல்லியால் என் எண்ணம் விரைவில் நிறைவேறிவிடும். நான் தனியே சற்று சிந்திக்கவேண்டும். நீங்கள் சென்று வரலாம்.

திரை.

[மதிவாணரும் சேனுதிபதியும்.]

மதிவாணர் :—சேனுதிபதி! அரசர் பொருமைப் படுகுழியிலே தவறி விழுந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிருர். அவரைக் கைதூக்கிவிட வேண்டியது நம்முடைய கடமை ஐயா. விருப்பு வெறுப்புக்குப் பயந்து நம்முடைய உள்ளுணர்ச்சியை வெளியிட மறுப்பது துரோகம்.

சேனுதிபதி :—அப்படியானுல் மன்னனின் போக்குக்கு மாருகப் பேசவேண்டுமென்கிறீரா ?

**மதிவாணர் :**—நீதிக்கு இழைக்கப்படும் களங்கத்தை விட அரசருக்கும் உமக்கும் இடையிலுள்ள அன்பு குறைந்து போகுமோ என்பதில் அதிக அச்சம் அடைகிறீர். மனச் சாட்சியை மறந்து விட்டவர் களால் மட்டும்தான் மன்னனின் போக்குக்கு 'ஆமாம்' போடமுடியும். நான் வருகிறேன்.

[போகிருர்.]

**சேனுதிபதி :**—(தனிமொழி) மதிவாணருக்கு என்ன துணிச்சல்? சரி, உம்.

திரை.

## காட்சி 4

அரண்மனையில் ஓரிடம் :

[சேரனும் இன்பவல்லியும்.]

**சேரன் :**—இன்பவல்லி! நாட்டிய ராணி என்ற முறையில் இவ்வளவு நாள் இந்த நாட்டுக்குப் புகழையும் பெருமையும் தேடிக் கொடுத்தாய். இனி சேரநாடு என்றென்றும் வளத்தோடு வாழ்வதற்கு உன் உதவி தேவையாயிருக்கிறது. உதவி அல்ல, தியாகம் என்றே சொல்லவேண்டும். உன்னையே அர்ப்பணித்துவிடுகிற இந்த முயற்சியில் சேர நாட்டின் நலன் அடங்கியிருக்கிறது.........இன்பவல்லி! என்ன யோசிக்கிறாய்?

**இன்பவல்லி :**—அரசே! உங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தயாராயிருக்கிறேன். ஆனால், நாட்டியம் ஒன்றைத் தவிர வேறு எவ்விஷயத்தையுமே அறியாத சிறுமி நான்.........

**சேரன்:**—அதனால்.........?

**இன்பவல்லி :**—தாங்கள் விரும்பும் மகத்தான இப்பணியை என்னால் நிறைவேற்றி வைக்க முடியுமா என்றுதான் அச்சப்படுகிறேன்.

**சேரன் :**—இன்பவல்லி! நீ சிறுமி என்பது நானறியாததல்ல. சேர நாட்டின் கலா பொக்கிஷமாகிய உன்னை இந்தப் பயங்கர முயற்சியில் ஈடுபடுத்துவதற்குமுன் நான் எவ்வளவுதூரம் யோசித்திருப்

பேன் என்பதை நீ அறியமாட்டாய். உன்னால்தான் இக்காரியத்தை வெற்றிகரமாக முடிக்க முடியும். கவிச் செல்வம் ஒருருக் கொண்டது போன்ற உன் அழகு, மார்பகத்தின் விம்முதல், தோட்களின் வளைவு, இடையின் இன்பமயமான நெளிவு, அனைத்தையும் உனக்குக் கணவனாக வரப் போகிற யாரோ ஒருவனுக்கு அர்ப்பணிப்பதைவிட இந்த நாட்டின் நன்மைக்காகத் தியாகம் செய்வது அழியாத கிர்த்தியைக் கொடுக்குமல்லவா?

**இன்பவல்லி** :—அரசே! பறவையை வலையில் சிக்க வைப்பதற்குமுன் வேடன் தானிய இரையை வீசி யெறிவதுபோன்ற இந்த முயற்சியில் சிறுமியாகிய நான் ஈடுபடுவதன் காரணமாக விபரீதம் நேர்ந்து விடக் கூடாதே என்று அஞ்சுகின்றேன். இப்படிச் சொல்லுவதால் நாட்டுப் பற்றில் மற்றவர்களைவிட நான் குறைந்தவளோ என்று நினைக்க வேண்டாம்.

**சேரன்** :—இன்பவல்லி! நான் தீர யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். களியாட்டங் களில் தன் பொழுதைச் செலவிட்டுவரும் பாண்டி யன் உன் விழிகளின் மின்வெட்டில் மயங்கி விடு வான். நீ ஒருத்தியே இதற்குத் தகுதியானவள்.

**இன்பவல்லி** :—அரசே! தங்கள் கட்டளைக்குக் கீழ்ப் படிகிறேன். ஆனால், சிறிதும் அரசியல் ஞான மில்லாதவள்.

சேரன் :—அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டிய தில்லை. நல்ல அரசியல் அனுபவமுள்ள சுந்தரியை யும் உன்னுடன் அனுப்புகிறேன்.

இன்பவல்லி :—தங்கள் உத்தரவு

சேரன் :—இதனால் உனக்கு எவ்வளவு பெரிய பரிசு கிடைக்கப்போகிறது என்பதைவிட இது உன் நாட்டிற்குச் செய்யும் எத்தகைய சேவை என்பதை நீ உணர்வாய். விரைவில் புறப்படத் தயாராகி விடுவாய் அல்லவா ?

இன்பவல்லி :—நாளையே வேண்டுமாயினும் நான் புறப்படுகிறேன்.

சேரன் :—வெற்றி எனதே! இன்பவல்லி! உன்னைப் பெற்ற நாடு ஒருநாளும் சிறுமைப்படாது.

[நகைக்கிறான்.]

திரை.

## காட்சி 5

அரச சபை:

[பாண்டியனும் இன்பவல்லியும். இன்பவல்லி நாட்டியம் ஆடிக் களைத்து நிற்கிருள்.]

**பாண்டியன்:**—இன்பவல்லி! இதோ இந்த ரத்தினம் இழைக்கப்பட்ட பொன் ஆசனத்திலே உட்கார். இந்த ஆசனம் இதுவரை எந்தப் பெண்மணிக்கும் இடம் கொடுத்ததில்லை. அதே போன்று என் மனம் கவர்ந்த மங்கையர் பலர். ஆனல் என் இதயத்திலே இடம் பெற்றவள் நீ ஒருத்திதான்.

**இன்பவல்லி:**—பிரபு! வானத்தின் நிறம் மாறுவதற்காவது சற்று நேரமாகும். மனம் மாறுவதற்கு அந்த நேரம்கூடத் தேவையில்லையே!

**பாண்டியன்:**—பெண்ணே! நீ கூறியது பொதுவான உண்மை. இதுவரை என் உள்ளத்திலே இப்படி ஒரு உறுதி தோன்றியதில்லை. உள்ளம் உன்னை விரும்புகிறது. இன்பவல்லி! நீ இன்பத்தின் கொடி! என் ஆத்மாவைப் பரிபூரணமாக்கும் அன்புக்கொடி!

**இன்பவல்லி:**—ஸ்வாமி! உங்கள் மொழிகள் என் உள்ளத்திலே பாய்ந்து மோகன இன்பத்தை மூட்டுகின்றன. பிரபு! என் பதினறு வருட உலக வாழ்வில் இப்பொழுது நுகரும் புதுமை உணர்ச்சியை நான் இதற்குமுன் கண்டதே இல்லை.

**பாண்டியன்** :—பொன்னால் ஆனதொரு பூங்கொடி நாட்டியமாடியதை நானும் இதற்குமுன் கண்ட தில்லை. மின்னல் பெண்ணுருக்கொண்டு நர்த்தனம் புரிந்ததைப்போன்ற உன் நடனத்தைக் கண்டு மெய்ம்மறந்தேன். வானத்துச் சந்திரன்தான் தன் பூரண கலைகளுடன் பூமியில் இறங்கி வந்து விட்டானே என்று ஐயப்பட்டேன். உண்மையில் நீ ஒரு பெண் என்று அறிந்ததும், இந்தத் தமிழகம் பாக்கியம் செய்தது என்று எண்ணி மகிழ்ந்தேன்.

**இன்பவல்லி** :—அரசே! புத்துணர்ச்சியின் எதிரொலி என் மனத்தைத் தடுமாறச் செய்கிறது. நான் சென்று வருகிறேன்.

**பாண்டியன்** :—ரதம் தயாராயிருக்கிறது.

[வணங்குகிருள்.]

திரை.

## காட்சி 6

அரண்மனையில் தனியிடம்:

[பாண்டிமாதேவி அமர்ந்துள்ளாள்.]

பல குரல்கள்:

"மன்னர் யாரோ ஒரு நாட்டியக்காரியின் மையலில் சிக்கிவிட்டார்!"

"இந்த நாட்டின் பட்டயங்களும் கல் வெட்டுக்களும் வைக்கப் பெற்றிருக்கும் ஆவணக்களரியில் அவளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதாமே!"

"நீதிக்கும் நியாயத்திற்கும், கல்விக்கும் கலைக்கும் வாய்த்த அமர பீடமாயிருந்த இந்த அரச பீடம் பாண்டிய வம்சத்தின் பரம்பரையில் தோன்றிய நெடுஞ்செழிய ரின் லீலா விநோத மண்டபமாக மாறி விட்டது!"

[அமைச்சர் வருகிறார்.]

தேவி:—அமைச்சரே! கேட்டீர்களா, பெருங்குடி மக்கள் பேசுவதை?

அமைச்சர்:—தேவி! கலையென்று வந்து வலை வீசி விட்டாள், அந்தக் கன்னி.

**தேவி** :—கலைஞர்கள் வருவார்கள், போவார்கள். இவளோ............

**அமைச்சர்** :—ஆம், தேவி! இவள் நெடுங்காலம் இங்கே வாழ வந்தவள்போல் நடந்து கொள்ளுகிறாள். மன்னரோ ஸ்திரவாசம் செய்விப்பவர்போல ஆவணக்களரியில் குடியேற்றியிருக்கிறார் அவளை.

**தேவி** :—மதியை அழிக்கும் மதுவை உண்டு மையலில் மயங்கிக் கிடக்கும் அவனிடம் நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்க முடியுமா? தாய்மையை அறியும் சக்திதான் அவனுக்கு உண்டா?

**அமைச்சர்** :—தேவி! வருந்தவேண்டாம்.

**தேவி** :—தாயின் அன்பில் கடுமை உண்டு. ஆனால் அது மென்மை கலந்தது. அவன் அதை அறியவில்லை.

**அமைச்சர்** :—நெறிதவறி நடப்பவன், நீதி கூறுபவன் முன்னால் நாணப்படுவது இயற்கைதானே? உண்மையும் நேர்மையும் கசப்பைத்தான் அளிக்கும் அம்மணி. இதனால்தான் மன்னர் தங்களைச் சந்திக்கவே விரும்பவில்லை.

**தேவி** :—அமைச்சரே! நெடுஞ்செழியனைப் பற்றிய கவலை என் உடலை விழுங்கிக்கொண்டே வருகிறது. அவனுடைய நடத்தை இன்னும் சிறிது காலத்திற்கு இப்படியே இருக்குமானால், கவலையை அனு

பவிக்கும் நிலையிலிருந்து நான் விடுதலைபெற வேண்டியதுதான்.

அமைச்சர்:—தேவி! எது பொய், எது உண்மை என்பதை அறிந்துகொள்ள அதிக காலம் தேவையில்லை. என்றே ஒருநாள் அம்மாயத் திரை கிழிந்து தானாகவேண்டும்.

தேவி:—ஆம். மாயத் திரை கிழிந்துதானாகவேண்டும்.

திரை.

மதுரை காமராசர் பல்கலைக்கழ
அன்னை
தி.க. சண்முகம் நூலகம்.

## காட்சி 7

அரண்மனையைச் சார்ந்த ஒரு நந்தவனம் :

[மாலைப்பொழுதில் பாண்டியனும் இன்ப வல்லியும் மகிழ்வுடன் பேசிக்கொண்டிருக் கின்றனர்.]

**இன்பவல்லி :**—என்றோ ஒருநாள் அம்மாயத் திரை கிழிந்துதானாகவேண்டும். அப்பொழுது இந்த இன்பவல்லியைக் கைவிட்டு விடுவீர்கள்.

**பாண்டியன் :**—இன்பவல்லி! அதோ அமுத நிலவைப் பொழிந்துகொண்டு வானமண்டலத்திலே உல்லாச யாத்திரை போகும் சந்திரன் சாட்சியாகச் சொல் லுகிறேன். உள்ளத்திலே உதயமாகியிருக்கும் உன் நினைவு மாயை அல்ல. உடலில் உயிர் இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை என் உள்ளத்தில் உன் உருவமிருப்பது!

[மெதுவாக ஒரு செடியின் பின் மறைந்துகொள் ளுகிறாள் இன்பவல்லி. இன்பவல்லி பாடு கிறாள்.]

**பாண்டியன் :**—சரி, இனி நானும் பாடவேண்டியது தான் போலிருக்கிறது!

**இன்பவல்லி :**—ஆம்! (சிரிப்பு) [வருகிறாள்]

**பாண்டியன் :**—ஏன் இன்பவல்லி சிரிக்கிறாய்?

**இன்பவல்லி** :—நான் விளையாட்டாகப் பதில் சொன்னதற்கு இப்படியா, பாடுவேன் என்று பழிதீர்க்க விரும்புகிறீர்கள்!

[இருவரும் சிரிக்கின்றனர். திடீரென்று இன்பவல்லி சோகமாக முகத்தை வைத்துக் கொள்ளுகிறாள்.]

**பாண்டியன்** :—இன்பவல்லி! இதென்ன......திடீரென்று.........!

**இன்பவல்லி** :—ஸ்வாமி! தங்களுடன் சிரித்துப் பேசும் இந்தப் பாக்கியம் நிரந்தரமானதா என்று நினைத்தேன்; வேறொன்றுமில்லை.

**பாண்டியன்** :—மீண்டும் மீண்டும் இதைக் கேட்டு...... ஆண்களின் மனத்தை வாட்டுவதில் பெண்களுக்கு என்ன திருப்தியோ? இதோ பார் இன்பவல்லி! பாலாறும் பெண்ணையும், காவிரியும் அமுதப் பிரவாகமாகப் பெருக்கெடுத்தோடும் தமிழகத்திலே, நம்முடைய பரந்த சாம்ராஜ்யத்தின் சிங்காதனத்திலே மணிமுடி தரித்து நாம் வீற்றிருக்கும் நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். போதுமா?

**இன்பவல்லி** :—கலாதேவியின் அடிமை என்பதைத் தவிர வேறு யோக்கியதை இல்லாத எனக்கா அந்தப் பதவி? ஸ்வாமி! கனவு காண்கிறேனா?

**பாண்டியன்** :—இல்லை—இன்பவல்லி, இது கனவல்ல, நினைவு.

இன்பவல்லி :—ஸ்வாமி! தென்றலுடன் கலப்பதைத் தவிர மகரந்தப்பொடிக்கு வேறு இன்பம் உண்டா? ஸ்வாமி தங்கள் கண்களில் காணப்படும் குறு குறுப்பு, கன்னங்களின் கவர்ச்சி, அவற்றின் குழிப் பிலே உள்ள கனிவு, தேன் இதழ்களின் சிரிப்பிலே மிளிரும் களிப்பு, மதிமுகத்திலே தோன்றும் வனப்பு, எல்லாம் நாட்டிய தேவனுன நடராஜப் பெருமானைத் தவிர வேறு யாருக்கேனும் இருக்குமா? தங்களைக் காணும்போதெல்லாம் அந்த மூர்த்தியின் தோற்றம்தான் என் இருதய மலரிலே கூத்தாடுகிறது.

பாண்டியன் :—நாட்டிய உருக்கொண்ட நீ நடராஜப் பெருமானை அடைவது நியாயம்தான்.

திரை

## காட்சி 8

சேரனின் சபை :

[சேனுதிபதியும், மதிவாணரும் உடன் இருக்கின்றனர்.]

சேரன் :—சேனுதிபதி ! அமைச்சர் மதிவாணரே ! என் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிக் கொண்டு வருகிறது.

சேனுதிபதி :—இன்பவல்லியிடம் சிக்கிக்கொண்டான் பாண்டியன். நம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள இதுவே தக்க சமயம்.

சேரன் :—ஆம். சேனுதிபதி, விரைவில் படை திரட்டுங்கள்.

மதிவாணர் :—படையா ? ஏன் ?

சேரன் :—போர் புரியத்தான் ! இது என்ன கேள்வி ! மதிவாணரே ! உங்கள் கருத்து விளங்கவில்லை !

மதிவாணர் :—போர்புரிவதென்று நிச்சயித்து விட்டீர்களா ?

சேரன் :—ஆம்.

மதிவாணர் :—போருக்கு இப்பொழுது என்ன அவசியம் ? பின்னுல் வருந்தாமலிருக்க இப்பொழுது சிறிது சிந்திக்கலாகாதா ?

சேரன் :—எதைப்பற்றிச் சிந்திப்பது ?

**மதிவாணர்** :—பாண்டிய அரச பீடத்தைப் பொது மக்கள் புகழ்ந்து பேசுகிறார்கள் என்பதற்காகப் போர் தொடுப்பது அநியாயமானது. நாகரிகமற்ற செய்கை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**சேரன்** :—அமைச்சரே! நீர் அறியாமற் பேசுகின்றீர்! இந்தச் சேர ராஜ்யம் ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் அடங்கிக் கிடக்கவேண்டியதுதானா? பாண்டியனுக்கு அவ்வளவு பரந்த ராஜ்யமா!

**மதிவாணர்** :—பாண்டியனுடைய படை பலத்திற்கு முன் நம்முடைய படை பலம் பெரிதல்ல.

**சேரன்** :—அது எனக்குத் தெரியும். தெரிந்துதானே நான்.........

**மதிவாணர்** :—அதுமட்டுமல்ல பிரபு! பொதுஜன அன்பால் ஆட்சிபீடத்தை அமைத்துள்ள பாண்டியனை நாம் சுலபமாக வென்றுவிட முடியாது. பொது மக்கள் அவ்வளவு பேருமே வீரர்களாக மாறிப் போர்க்களம் புகுந்து விடுவர்.

**சேரன்** :—அந்தக் காலம் மாறும்வரை காத்திருந்தாகி விட்டது.

**மதிவாணர்** :—பிரபு! படைபலம் காரணமாக இப்பொழுது நாம் பாண்டியன்மீது போர் தொடுப்பதாக வைத்துக்கொள்வோம். நம்மைவிட படை பலமுள்ள வேறு மன்னன் நம்மீது போர் தொடுத்

தால் என்ன செய்வது? இப்படிப் பார்த்தால் 'தடி எடுத்தவன் தண்டல் காரன்' என்றல்லவா ஆகி விடும்!

**சேனுதிபதி :—**இப்பொழுது கிடைத்துள்ள அரிய சந்தர்ப் பத்தைக் கை நழுவவிட நாம் அறிவீனர்களில்லை.

**சேரன் :—**அப்படிச் சொல்லும்!

**மதிவாணர் :—**சரி, நமக்கு வெற்றி என்றே வைத்துக் கொள்ளுவோம். சொந்த விருப்பு வெறுப்பை முன்னிட்டு ஆயிரக் கணக்கான மக்களைப் பலி இடுவது எவ்வளவு அநியாயம்!

**சேரன் :—**மதிவாணரே! ராஜாங்க முறை தெரியாமல் பேசுகிறீர். ஒரு தனி மனிதன் இன்னொரு தனி மனிதனுடன் சச்சரவிடுவது குற்றம். ஆனுல் ஒரு அரசன் இன்னொரு அரசன்மீது போர் தொடுப்பது வீரம்.

**சேனுதிபதி :—**மதிவாணர் பயப்படுகிருர் போலும்!

**மதிவாணர் :—**நீதிக்குப் புறம்பாகச் செல்லப் பின் வாங்குபவன் கோழையல்ல பிரபு! அவனே வீரன்.

**சேரன் :—**மன்னனுக்கு ஏற்பட்ட மாசைப் போக்க நினையாத நீரா வீரம் பேசுவது?

**சேனுதிபதி :—**இப்படிப்பட்ட கோழைகள் ஆட்சி பீடத்தில் பெரும் பதவி வகிப்பதற்குத் தகுதி இல்லை.

**மதிவாணர் :**—மாசே ஏற்படவில்லையே. மாசு ஏற்பட்டிருப்பது உங்கள் மனச்சாட்சியில்தான். பொருமை என்பது மனித சுபாவம் படைத்த அனைவருக்கும் தோன்றுவது இயற்கை. அறிவாளியாயிருப்பவன் பொருமைப்படுவது அவசியம்தானு என்பதைச் சிந்தித்து அதைக் கைவிட்டு விடுகிறுன். மற்றவர்கள் பொருமைத் தீயிலே விழுந்து மடிகிருர்கள்.

**சேரன் :**—மதிவாணரே.........

**மதிவாணர் :**—அரசே! அநியாயத்தை அநியாயம் என்று சொல்லக்கூட அஞ்சவேண்டுமா?

**சேரன் :**—போதும்! நீர் மன்னனின் விருப்பத்துக்கு மாருகப் பேசுகிறீர். கடமை அறியாதவர்.

**மதிவாணர் :**—மன்னு! மன்னிக்கவேண்டும். உண்மையாக உங்களை நேசிக்கும் ஊழியன் நான். அந்த நேசம் காரணமாகத்தான் தங்கள் கோபத்தையும் பொருட்படுத்தாது தங்கள் நன்மையை விரும்புகிறேன். மன்னன் சந்தர்ப்பத்தின் குறுக்கீட்டின் காரணமாக வழி தவறும்போது திருத்த வேண்டியது மந்திரியின் கடமையல்லவா?

**சேரன் :**—போதும். விரைவில் போர் தொடங்குவதென்று முடிவு செய்துவிட்டேன். இன்ருேடு உமது அமைச்சர் பதவி முடிந்தது.

**மதிவாணர் :**—அரசே! துரும்பின் துணை பற்றிக் கரை சேர முடியாது. வாளை வீசுகிறீர்கள். அது திரும்

பிப் பாயும்போது துடிதுடிக்கப் போகிறீர்கள். இறைவன் உங்களைக் காப்பாற்றுவானாக. நான் போய் வருகிறேன்.

[போகிறார்.]

**சேரன் :**—சேனாதிபதி! மதிவாணரின் போக்கு விபரீதமாக இருக்கிறது, பார்த்தீரா?

**சேனாதிபதி:**—எப்போதுமே அவர் சிறிது செருக்குடையவர்தான்.

**சேரன் :**-போர் தொடங்குவதென்ற எனது முடிவைப் பற்றி உமது கருத்தென்ன?

**சேனாதிபதி :**—உங்கள் பரந்த லட்சியம் நானறியாததா பிரபு!

திரை

## காட்சி 9

தோட்டம் :

[சுந்தரி பாடிக்கொண்டே வருகிருள். மற்ருெரு புறமிருந்து இன்பவல்லி வருகிருள்.]

**இன்பவல்லி** :—சுந்தரி! என்ன இன்று ஆனந்தம் தாங்கமுடியவில்லை போலிருக்கிறதே!

**சுந்தரி** :—நாம் வந்த காரியத்தில் எதிர்பாராத வெற்றி வெகு சுலபத்தில் கிடைக்கும்போது.........

**இன்பவல்லி** :—வெற்றியா?

**சுந்தரி** :—வெற்றியில்லையா என்ன? அதுவும் இவ்வளவு எளிதில்?

**இன்பவல்லி** :—எதைச் சொல்லுகிருய்?

**சுந்தரி** :—சரிதான் போ. அடுத்தாற்போல எதற்காக நாம் வந்திருக்கிருேம், ஏன் வந்திருக்கிருேம் என்று கூட நீ கேட்பாய் போலிருக்கிறதே!

[ராஜகுமாரி இன்னெருபுறமிருந்து]

**குமாரி** :–அந்தக் கேள்வியைத்தான் நான் எவ்வளவோ தடவை கேட்டுவிட்டேன். சரியான பதில்தான் இல்லை.

**இன்பவல்லி** :—யார் அரசகுமாரியா?

**குமாரி** :—ஆச்சரியப்படுகிருயா? என்னை எதிர்பார்க்கவில்லை போலும்!

சுந்தரி :—தாங்கள் குறுக்கிட்டதை நாங்கள் விரும்ப வில்லை என்று சொல்லவில்லையே!

குமாரி :—நீ சொல்லித்தான் நான் புரிந்து கொள்ள வேண்டுமென்ற அவ்வளவு மடமையையா என்னிடம் எதிர்பார்க்கிருய்?

சுந்தரி :—உங்கள் புதிர்களுக்கு என்னுல் பதில் சொல்ல இயலாது.

குமாரி :—எப்படி முடியும்? வெள்ளை மனமானுல் பயமற்றுப் பேசலாம்

[சுந்தரி போகிருள்.]

சுந்தரி! எங்கு போகிருய்?

சுந்தரி :—அரசகுமாரி! தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் காரணமில்லாமல் என்னைச் சந்தேகிக்கிறீர்கள்.

குமாரி :—ஹூம், நீயும் இன்பவல்லியும் இங்கே இருப்பது இந்த நாட்டின் நன்மைக்கென்று எனக்குத் தோன்றவில்லை.

இன்பவல்லி :—அரசகுமாரி!

குமாரி :—இன்பவல்லி! உன் உருவம் பார்க்க எவ்வளவு களங்கமற்றிருக்கிறது. அதில் மாசற்ற இருதயம் இருந்திருக்கலாகாதா? ஹூம்.

[இன்பவல்லி போகிருள். ராஜகுமாரி பார்த்துக் கொண்டே நிற்கிருள்.]

திரை.

## காட்சி 10

அரண்மனை :

[அமைச்சரும் பாண்டிமாதேவியும்]

**அமைச்சர்** :—பாண்டிமாதேவி! அபாயம் அரசரை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. இன்பவல்லி என்று பெயர்பூண்டு துன்ப மூட்டையுடன் தோன்றியிருக்கும் கள்ளி அவள். மன்னனையும் இந்நாட்டையும் அழித்து விடுவதற்காகப் பகை அரசனுல் ஏவப்பட்ட சூழ்ச்சிக்காரி.

**தேவி** :—அமைச்சரே! நீங்கள்தான் எப்படியாவது அவனைக் காப்பாற்றவேண்டும். என் தாயுள்ளம் கொந்தளிக்கிறது, குமுறுகிறது. விளக்கின் ஜோதியைப் புஷ்பமென்று கருதும் விட்டில் அவன். இந்த சாம்ராஜ்யத்தின் அழிவுக்கு என் குமாரன் காரணம் என்று ஏற்படுமானுல் அந்தப் பாரத்தைச் சுமந்துகொண்டு என்னுல் இருக்கவும் முடியாது. நிம்மதியாக இறக்கவும் முடியாது.

**அமைச்சர்** :—அம்மணி! குளிர் காய்வதற்காக மூட்டப்பட்ட நெருப்பு வீட்டையே எரித்துவிட்டதுபோல், பொழுது போக்குக்காக ஏற்படுத்தப்பெற்ற கலைக்கூடம் மன்னரின் வீழ்ச்சிக்குக் காரணமான பலிபீடமாக மாறிவிட்டது.

**தேவி** :—நெடுஞ்செழியன் எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்டான்.

அமைச்சர் :—அதனுல்தான் அம்மணி நாம் சொல்லும் நீதிகள் அவருக்கு நாராசத்தைப்போல் இருக்கின்றன.

தேவி :—இதற்கு மாற்றம்தான் என்ன ?

அமைச்சர்:-எப்படியும் அவரைக் காப்பாற்றவேண்டும்.

[யாரோ போவது தெரிகிறது.]

யார் அங்கே போவது? சேவகா, பார்!

சேவகன் :—பிரபு நாட்டியக்காரியின் தோழி சுந்தரி போகிருள்.

தேவி :—அமைச்சரே! நிர்வாகக் காரியங்களைக் கவனித்துவிட்டு மாலை வாருங்கள். என் மகனைக் காப்பாற்ற ஒரு மார்க்கம் கூறுங்கள்.

அமைச்சர் :—வணக்கம்.

திரை.

## காட்சி 11

தோட்டம் :

[பாண்டியனும் இன்பவல்லியும்]

(சந்திரோதயம்)

**பாண்டியன் :**—இன்பவல்லி! சந்திரனின் தோற்றம் எப்படி இருக்கிறது பார். கடல் அரசனும், நதிகளாகிய மாதர்களும் கூடி அலைகளுக்கிடையே ஆடும் பொழுது ஒருவர் மீது ஒருவர் வீசி யெறிந்து கொண்ட பூச்செண்டு மேலெழுந்ததுபோல் தோன்றுகிறதல்லவா?

**இன்பவல்லி :**—அரசே! முத்துக்களை வீசுகின்ற கடலின் முகட்டிலே முளைத்தெழுந்த நிலா, இருட்டரசன் மாலையாகிய மங்கையைத் திருமணம் புரியும் பொழுது வைக்கப்பட்ட பொற்குடத்தைப் போலிருக்கிறது.

**பாண்டியன் :**—அருமையான கற்பனை இன்பவல்லி!... ஓஹோ! நாணம் மேலிட்டுவிட்டதோ?......எங்கே ஓடுகிறாய் இன்பவல்லி! உன் சாதாரண நடையே நாட்டியத்தின் உன்னத பாவம்போல் காட்சியளிக்கிறதே. இதோ உன்னைப் பிடித்துவிட்டேன், பார்த்தாயா? (சிரிப்பு)

[இருவரும் பாடுகின்றனர்]

**இன்பவல்லி :**—இந்தக் கல் மேடையில் அமர்வோம் பிரபு. மரம், செடி, கொடி எல்லாவற்றுக்கும்

பொன் முலாம் பூசும் சந்திரனின் அமுதக் கிரணங்களின் அழகிய தோற்றம் உள்ளத்திலே இன்ப வாரிதியைப் பெருக்குகிறது.

**பாண்டியன் :**—உன் கருங் கூந்தலும் அதனிடையே தோன்றும் முகமும், வான மண்டலத்தில், மேகத்தினிடையே சந்திரன் இருப்பதைப் போலிருக்கிறதல்லவா? மேகத்தை மின்னுகிய கோடுகள் பிளந்தோடுவதைப்போல உன்னுடைய கோதி முடித்த கூந்தலிலே பொன்னுபரணங்கள் சூட்டியிருப்பது எவ்வளவு ரம்மியமாயிருக்கிறது தெரியுமா?

**இன்பவல்லி :**—(வருத்தமாக) அரசே!

**பாண்டியன் :**—இன்பவல்லி! ஏன் உன் முகம் வாட்டமடைந்திருக்கிறது?

**இன்பவல்லி :**—நிரந்தர குதூகலத்துடன் வாழும் பாக்கியம் செய்திருந்தாலல்லவோ என் முகம் எப்பொழுதும் மலர்ந்திருக்கும்.......

**பாண்டியன் :**—இன்பவல்லி! பிதற்றுகிருய்.

**இன்பவல்லி :**-உன்மத்தம் பிடித்தவள் பிதற்றத்தானே முடியும் அரசே.

**பாண்டியன் :**—என்ன சொல்லுகிருய்?

**இன்பவல்லி :**—அரசே! என்னுடைய இந்த வாழ்வு கனவு தானே?

**பாண்டியன் :**—இதெல்லாம் என்ன இன்பவல்லி......?

இன்பவல்லி :—தங்கள் மனதை யாரும் கலைக்க நினைத்தால்........ ...

பாண்டியன் :—யாரால் கலைக்க முடியும்?

இன்பவல்லி :—தங்கள் தாய், தங்கை, அமைச்சர்...

பாண்டியன் :—(சிரித்து) இதற்குத்தான் பெண்களைப் பேதை என்கிறார்கள். காரணம் சிறிதுமின்றி மலர் போன்ற உன் உள்ளத்தை எவ்வளவு வதைத்துக் கொண்டாய்........?

இன்பவல்லி :—ஸ்வாமி! இதை நான் நம்பலாமா?

பாண்டியன் :—இன்னுமா அவநம்பிக்கை?

இன்பவல்லி :—ஒருவேளை நான் கொடியவளாக இருந்தால்.........?

பாண்டியன் :—இன்பவல்லி! என் சுகத்தையே திருடி உன் வாழ்க்கையுடன் பின்னிக்கொண்டாயே இதைவிடவா கொடுமை இழைக்க முடியும் உன்னால்? (சிரிப்பு)

[சுந்தரி வருகிறாள்.]

சுந்தரி :—இன்பவல்லி!... ஆ... அரசரா தயவு செய்து மன்னிக்கவேண்டும்.

இன்பவல்லி :—சுந்தரி!

பாண்டியன் :—சுந்தரி! இங்கே வா, எங்கே போகிறாய்? என்ன விசேஷம்?

சுந்தரி :—ஒன்றுமில்லை......இன்பவல்லியைக் கண்டு... ...ஆ......இன்பவல்லியின் முகம் ஏனிப்படி வாடி இருக்கிறது ?

பாண்டியன் :—அர்த்தமற்று உளறும் அவளை நீயே கேள்.

சுந்தரி :—ஓ! அதனால் அவள் மனம் பதைக்கிறுளோ ?

பாண்டியன் :—எதனால் ?

சுந்தரி :—பாவம். எத்தனை நாட்களுக்குத்தான் மனதில் அடக்கி........

பாண்டியன் :—இதெல்லாம் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

சுந்தரி :—அரசே!.........நீங்கள் இருவரும் உடலால் இருவர்......

பாண்டியன் :—ஆனால், அவளை என் உயிரினும் பெரிதாக மதிக்கிறேன்.

சுந்தரி :—உங்களுடைய இன்ப துன்பங்கள் அவளையும் சேர்ந்தவைதானே ?

பாண்டியன் :—சந்தேகமில்லாமல்.

சுந்தரி :—அதனால்தான் பிரபு.... ...உங்கள் உள்ளம் வருந்தும் என்றுலும், காதால் கேட்டதைத் தங்களிடம் தெரியப்படுத்த வேண்டுமென்று அவள் விரும்பியிருக்கலாம்.

பாண்டியன் :—என்ன அது ?

**சுந்தரி :**—பிரபு! தங்கள் தாய் பாண்டிமாதேவியைப் பற்றி அவதூருகச் சொல்வதாக தயவுசெய்து வெகுளக் கூடாது.

**பாண்டியன் :**—என் தாயா? விஷயத்தைச் சொல்.

**சுந்தரி :**—தன் காதலரின் தாயைப்பற்றி யாரும் ஏதாவது பேசினுல் எந்தப் பெண்ணின் நெஞ்சுதான் துடிக்காது.

**பாண்டியன் :**—சுந்தரி! என்ன சொல்லுகிருய்?

**சுந்தரி :**—தங்கள் தாயாரும் அமைச்சரும் அரசாங்க விஷயமாகச் சந்தித்துப் பேசலாம், ஆனுல்......

**பாண்டியன் :**—இல்லை, இது பொய்.........

**சுந்தரி :**—நானும் இன்பவல்லியும் பொய்யென்றுதான் எண்ணுகிறேம். ஆனுல்.........

**பாண்டியன் :**—ஆனுல் என்ன?

**சுந்தரி :**—அவர்களுடைய சந்திப்பைப் பற்றி ஊரார் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகின்றனர். வம்புப் பேச்சு வளர்ந்து வருத்தத்தை அளிக்கும் நிலைவரை விடாமல் முளையிலேயே கிள்ளி யெறிந்துவிடுவது நல்லதல்லவா?

**பாண்டியன் :**—சரி.

**சுந்தரி :**—இல்லாமற் பிறவாது, அள்ளாமல் குறையாது. பாண்டிய மன்னனின் தாய்......ஒரு......

**பாண்டியன் :**—போதும்,......நான் வருகிறேன்.......

[புறப்படுகிருன்]

திரை

## காட்சி 12

இன்பவல்லியின் விடுதிக்கு முன் இடம் :

[பாண்டியன் தளர்ந்து நடந்து வருகிறான். ஒரு செடிக்குப்பின் யாரோ பதுங்கி இருப்பது தெரிகிறது.]

**பாண்டியன் :**—யார் அங்கே?

**தேவி :**—(எழுந்து) மகனே! நான் தான்......

**பாண்டியன் :**—அம்மா! நீங்கள் தானா? உருவிய வாளுடன் இங்கே பதுங்கியிருப்பானேன்? இதோ இது யார்?

[அமைச்சர் எழுந்திருக்கிறார்.]

**அமைச்சர் :**—தங்கள் அமைச்சர் நல்லந்துவன்.

**தேவி :**—மகனே! நீரில் விழுந்த எறும்பின் நிலையில் இருக்கிறாய் நீ. உன்னை அறியாமலே சூழ்ச்சிக் காரர்களின் வலையில் அகப்பட்டுக்கொண்டாய். அதை எடுத்துச் சொல்லி அறிவு புகட்டக்கூடிய நிலையை மீறிவிட்டாய் நீ.

**பாண்டியன் :**—இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. நீங்கள் இங்கே பதுங்கியிருந்த காரணம்?

**தேவி :**—உன் உயிரைவிட எனக்கு வேறு அரிய பொருள் உண்டா? அதைக் காப்பாற்ற........

**அமைச்சர் :**—சதிகாரர்களால் உங்களுக்கு அபாயம் ஏற்படாமல் இருக்க நீங்கள் அறியாமலே, இந்த

ஒரு இரவல்ல எத்தனையோ இரவுகளாகக் காத்து வருகிறோம்.

பாண்டியன் :—நீங்களா என்னைக் காப்பாற்றி வருகிறீர்கள்?

அமைச்சர் :—வஞ்சகத்தை அறியாத நீங்கள் வஞ்சகர்களின் நடுவே இன்புற்றிருக்கிறீர்கள். உங்கள் உயிரை வேலையாட்களிடம் ஒப்புவிக்க உங்கள் அன்னையின் மனம் சம்மதிக்கவில்லை.

பாண்டியன் :—அதற்காக ஒரு பெண்.........

தேவி :—பெண்மை மென்மையானதுதான். ஆனால் அது வீரம் கலந்தது. கோழி தன் பலத்தை மறந்து குஞ்சைக் கொத்தவரும் பருந்திடம் போராடுவதை நீ கண்டதில்லையா? வீரத்தின் திருவுருவாய் விளங்கிய பெண்களின் செயலை நீ கேட்டதில்லையா? வீராங்கனைகள் பலர் தோன்றிய நாடு இது. இந்த நாட்டிலே பிறந்த ஒரு பெண் தன் புத்திரனைக் காப்பாற்றக்கூட சக்தியற்ற கோழையாகவா ஆகிவிடுவாள்?

பாண்டியன் :—போதும். உண்மைக்கு மாறான பேச்சு.

தேவி :—என்ன?

பாண்டியன் :—எல்லாம் எனக்குத் தெரியும். என் இன்பவல்லியைக் கொல்வதற்கு நீங்கள் செய்யும் கூட்டுச் சதி இது.

தேவி :—நெடுஞ்செழியா.........?

அமைச்சர் :—அரசே! உங்கள் அன்னையைப் பார்த்தா இவ்வாறு சொல்லுகிறீர்கள்.

பாண்டியன் :—நிறுத்துங்கள், என்னென்ன காரியங்கள் இங்கே நடக்கின்றன வென்பதை நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன்.

[சிலர் ஓடும் சப்தம் கேட்கிறது. இன்பவல்லி வருகிருள்,]

பாண்டியன் :—யாரோ ஓடுவது போன்ற சப்தம் கேட்கிறதே........இன்பவல்லி! நீ எங்கே வந்தாய்?

இன்பவல்லி :—(பதற்றத்துடன்) ஆம்! அரசே!

பாண்டியன் :—ஏன் இந்தப் பதற்றம்?

இன்பவல்லி :—அரசே! தங்களை வழியனுப்பிவிட்டு உள்ளே சென்றதும் ஏதோ கூக்குரல் கேட்டது ஓடி வந்தேன்.

[சுந்தரி வருகிருள்.]

பாண்டியன் :—சுந்தரி! நீயும்........

சுந்தரி :—ஆம், அரசே! நான் நினைத்தபடிதான் எல்லாம் நடக்கின்றன.

பாண்டியன் :—என்ன?

சுந்தரி :—அரசே! அமைச்சரின் சூழ்ச்சி உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது. தங்கள் அன்னையைக் கைப்பொம்மையாக்கி தங்களைக் கொன்றுவிட்டு இந்த அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கை இது.

தேவி :—சுந்தரி! என்ன சொல்லுகிறுய்?

அமைச்சர் :—இது பயங்கரமான பொய்.

சுந்தரி :—அரசே! என் காதில் விழுந்த இவ்விஷயத்தை முதலில் நம்ப மறுத்தேன். பெற்ற தாயே பிள்ளையைக் கொல்லும் சூழ்ச்சிக்கு உடந்தையாயிருக்க மாட்டாரென்று எண்ணினேன்.

பாண்டியன் :—ஏன் இருக்காது? நான் இன்பமாகப் பொழுதைக் கழிப்பதைத்தான் அவர்கள் விரும்பவில்லையே.

அமைச்சர் :—அரசே! தாங்கள் இதை நம்புகிறீர்களா?

சுந்தரி :—இச்சதிகாரர்களுக்குத் துணையாக வந்த படைவீரர்களே இப்பொழுது ஓடியவர்கள். பிரபு! உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

பாண்டியன் :—ஆம், நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானல் இவ்விருவரும் உயிருடன் வெளியில் இருக்கக்கூடாது.

அமைச்சர் :—அரசே!

தேவி :—அமைச்சரே! இனி அவனுடன் பேசிப் பயன்?......எது ஒளி, எது இருள் எனப் பகுத்தறியும் சக்தியை இழந்து வஞ்சகர்கள் ஊட்டிய நஞ்சை அருந்திய அவன் நெஞ்சில் ஈரமில்லாமல் பேசுவதில் வியப்பில்லை.

பாண்டியன் :—வியப்புக்கு இடமில்லை. இத்தனை நாட்கள் உங்களைச் சிறையில் அடைக்காமல் விட்டது...

**அமைச்சர் :**—அரசியாருக்குச் சிறையா.....?

**பாண்டியன் :**—உமக்கும்தான். அங்கும் உமது சதியை தொடர்ந்து நடத்த முயற்சிப்பீரா?

**தேவி :**—தாயிடம் பேசுகிறோம் என்பதை மறந்து பேசும் அவனிடம் தர்க்கம் ஏன்? நெடுஞ்செழியா! ......மனித ரத்தத்தால் கழுவவேண்டிய உன் கண் கண்களில் படிந்துள்ள மாசை.........

**பாண்டியன் :**—உங்கள் சிறைவாசக் காட்சியால் மாற்ற இயலுமா என்று பார்க்கிறேன்.

[கேலியாக நகைக்கிருன்.]

திரை.

## காட்சி 13

அரண்மனையில் தனியிடம்:

[இன்பவல்லி சோகமாக உட்கார்ந்திருக்கிறுள்.]

சுந்தரி:—(கடுமையாக) இன்பவல்லி! உன்னையே நீ மறந்துவிட்டாய்.

இன்பவல்லி:—சுந்தரி! அனுபவத்திலும் அறிவிலும் பெரியவளான நீ என் செய்கை தவருனதென்று உண்மையிலேயே கருதுகிருயா?

சுந்தரி:—தவரு? மகத்தான தவறு என்று சொல்லுகிறேன். பாண்டியனை மயக்கவேண்டிய நீ, அவன் மையலில் விழுந்து விட்டதாக நடிக்கவேண்டிய நீ, உண்மையிலேயே அவன் வசப்பட்டுவிட்டாய்.

இன்பவல்லி:—அது என் குற்றமல்ல.

சுந்தரி:—நீ சேரநாட்டிலிருந்து பாண்டி நாட்டிற்கு எதற்காக அனுப்பப்பட்டாய்?

இன்பவல்லி:—எதற்காக அனுப்பப்பட்டேன். என் வஞ்சகத்தில் நானே பலியாகவா?

சுந்தரி:—மிகவும் நன்ருக இருக்கிறது உன் போக்கு. சில நாட்களாகச் சேர மன்னனுக்கு நாம் எவ்வித குறிப்பும் அனுப்பவில்லை என்பதை அறிவாயா?

இன்பவல்லி:—அறிந்து பயன்?

சுந்தரி :—அவன் உப்பைத் தின்ற நீ அவனுக்குத் துரோகம் செய்ய நினைக்கிறாயா ?

இன்பவல்லி:—என்னை நம்பி உள்ளன்புடன் நேசிக்கும் பாண்டிய மன்னனுக்கு நான் துரோகம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறாயா ?

சுந்தரி :—என்ன ?

இன்பவல்லி :—என் ஸ்வாமிக்குத் தீங்கிழைக்க நான் இசைய.........

சுந்தரி :—என்ன ? ஸ்வாமியா ? வெகு அழகாக இருக்கிறது ?

இன்பவல்லி :—சுந்தரி ! நீயும் ஒரு பெண்தானே ? ஒரு பெண்ணின் உள்ளத்தை நீ அறியமாட்டாயா ?

சுந்தரி :—பேஷ் ! கடமை தவறிய நீ எனக்கே உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டாயா ?

இன்பவல்லி :—சுந்தரி ! இனியும் கொடுமை இழைக்க என் இருதயத்தில் போதிய கடுமை இல்லை. நான் பாண்டிமா தேவியையும் அமைச்சரையும்.........

சுந்தரி :—ஓ ஹோ ! காதலுக்கு இடம் கொடுத்த உன் மனம் கருணைக்கும் இடம் கொடுத்துவிட்டதோ ?

இன்பவல்லி :—இதுவரை, உன் வார்த்தைகளுக்கு அஞ்சி வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டேன். இனி என் கடமை.........

சுந்தரி :—சேரமன்னன் உன்னிடமிருந்து இதை எதிர் பார்க்கவில்லை.

இன்பவல்லி :—பாண்டிய மன்னருக்கு நான் செய்ய வேண்டிய பணி இதுதான்.

சுந்தரி :—உன்னுடைய இந்த விபரீதப் போக்கு சேர னுக்கு எட்டினால்.........

இன்பவல்லி :—நான் எனக்காக அஞ்சுவதை மறந்து விட்டேன்.

சுந்தரி :—ஹூம், அப்படியா ? பாண்டிய மன்னனின் வீழ்ச்சிக்கு உலை வைக்கவேண்டிய நீ உன் வீழ்ச் சிக்கே உலை வைத்துக்கொண்டாய்.

திரை

## காட்சி 14

பாண்டியன் உட்கார்ந்திருக்கிருன் :

[அரசகுமாரி வருகிருள்]

குமாரி :—அண்ணு ! உனக்கு வெட்கமாயில்லே.

பாண்டியன் :—குமாரி.........

குமாரி :—என்னே உன் தங்கை என்று சொல்லிக் கொள்ள உன் நாக் கூசவில்லேயா ?

பாண்டியன் :—ஏன் இப்படிக் கோபப்படுகிருய். என்ன செய்து விட்டேன் ?

குமாரி :—என்ன செய்யவில்லே ? இந்தக் கேள்வியைக் கேட்க உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது ?

பாண்டியன் :—அதிகம் பேசாதே. சொல்லவேண்டியதைச் சொல்.

குமாரி :—என் தாயை எதற்காகச் சிறையிலடைத்தாய். அமைச்சரைச் சிறைப்படுத்தக் காரணம்?

பாண்டியன் :—மக்களுக்கு அவர்களிடமுள்ள மதிப்பு மங்காதிருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்திஞல்தான்.

குமாரி :—அவர்களேப்பற்றிக் கேவலமாகச் சொல்லி அதே சமயத்தில் உன்னேயும் அரசன் என்று சொல்

லிக்கொள்ள........ஆம் மறந்துவிட்டேன், உனக்கு மானம் என்று ஒன்றிருந்தாலல்லவா ?

பாண்டியன் :—உன் வார்த்தைகள் அத்துமீறிப் போகின்றன.

குமாரி :—தலைக்குமேல் சாண் போனாலென்ன. முழம் போனாலென்ன? நம் குலத்தின் பெருமையை அழிப்பதற்கு நீ காரணமாயிருந்தாய் என்ற அவச் சொல்லைத் தாங்கிக்கொள்ளக்கூடிய தைரியத்தைப் பெற்றுவிட்டாய்போலும்.

பாண்டியன் :—போதும், நிறுத்து.

குமாரி :—நம் எதிரிகள் இந்தச் சந்தர்ப்பத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உன் நாட்டிய ராணி இன்பவல்லி அவர்கள் கைப்பாவை என்பதில் ஐயமில்லை.

பாண்டியன் :—இன்பவல்லியைப்பற்றி நீ ஒன்றும் பேசக்கூடாது.

குமாரி :—அதோ அவளே வருகிறாளே.

[இன்பவல்லி வருகிறாள்.]

உன்னைப் பார்க்கவந்தவள் என்னைக் கண்டு ஏன் இப்படி மிரள மிரள விழிக்கிறாள் ?

பாண்டியன் :— இன்பவல்லி என்ன விசேஷம் ?

குமாரி :—இன்பவல்லி! சும்மா வாம்மா! ஏனிப்படி பயப்படுகிருய்? ஹூம். உனக்குக் குற்றமுள்ள நெஞ்சு என்று நான் சொல்லவில்லையே......! இன்ப ......வல்லி! நீ ஒரு பெண்தானே? மனமறிய என் சகோதரனை வஞ்சிக்கிருயே. ஒரு அரச வம்சத்தையே நாசம்செய்யத் துணிந்த உன்னிடம் மனச்சாட்சியை எதிர்பார்க்க முடியுமா? உன் பசப்பு வார்த்தைகளின் மயக்கத்தில்........

[இன்பவல்லி கண்ணீர் விடுகிருள்.]

பாண்டியன் :—குமாரி! போகிருயா? இல்லை.........

குமாரி :—என்னையும் சிறையில் அடைத்து விடுவாயோ? நான் போகிறேன். ஆனல், உன் மிரட்டலுக்குப் பயந்துகொண்டல்ல. இன்பவல்லி! நான் சொல்வதை நன்ருய் அறிந்துகொள். உன் உதட்டுப் புன்முறுவலில் என் சகோதரனை வீழ்த்தலாம். ஆனல், எல்லாரையுமே அப்படி ஏமாற்றிவிட முடியாது.

(போகிருள்.)

திரை.



7

## காட்சி 15

சேரன் சபை :

[சேரனும் சேனாதிபதியும்]

சேரன் :—சுந்தரியிடமிருந்து வந்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனித்தீரா ?

சேனாதிபதி :—ஆம் பிரபு ! கவனித்தேன். இரை தேடப் போனவள், தானே இரையாகிவிட்ட கதையாக இருக்கிறது !

சேரன் :—அவளை நான் எவ்வளவு நம்பியிருந்தேன் .........

சேனாதிபதி :—இந்தப் பொறுப்பான வேலைக்கு வேறு யாரையேனும் அனுப்பியிருக்க வேண்டும் பிரபு.

சேரன் :—இது அவள் குற்றமல்ல............பருவ காலம்.........

சேனாதிபதி :—மன்னனை மணந்து ராணியாக வாழ்க்கை நடத்திவிடலாமென்று கனவு கண்டுவிட்டாள் போலும் !

சேரன் :—மன்னன்...................இன்னும் எவ்வளவு காலத்துக்கு மன்னன் !

சேனாதிபதி :—இன்னும் சிறிது காலம் உண்மையாக நடந்திருந்தால், இன்பவல்லி எவ்வளவு பெரிய

பதவியைப் பெற்றிருப்பாள்! எதற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா ?

சேரன் :—உடனே திரும்பிவர வேண்டுமென்று இன்ப வல்லிக்குத் தாக்கீது அனுப்பும்.

சேனதிபதி :—அவள் வர மறுத்தால்.........?

சேரன் :—அப்பொழுது கூறுகிறேன்.

சேனதிபதி :—உத்தரவு.

திரை.

## காட்சி 16

தோட்டம் :

[பாண்டியன் அமர்ந்துள்ளான்; இன்பவல்லி அவன் காலில் விழுகிருள்.]

**பாண்டியன் :**—இன்பவல்லி! இதென்ன அலங்கோலம், எழுந்திரு.

**இன்பவல்லி :**—அரசே! என்னை மன்னிப்பீர்களா?

**பாண்டியன் :**—மன்னிப்பா, எதற்கு?

**இன்பவல்லி :**—பிரபு! உள்ளத்திலே விஷமும் உதட்டிலே அமுதமும் வைத்துப் பேசிய பாபமே உருக்கொண்ட எனக்கு மன்னிப்பும் உண்டா?

**பாண்டியன் :**—இன்பவல்லி! நீ இவ்வளவு தூரம் வருந்தும்படி என்ன நடந்தது?

**இன்பவல்லி :**—துரோகியாகிய என்னை மன்னிப்பீர்களா?

**பாண்டியன் :**—மன்னிப்பே வேண்டியதில்லை, விஷயத்தைச் சொல்லு.

**இன்பவல்லி :**—ஸ்வாமி! குற்றம் புரிவது மனித இயல்பு. மன்னிப்பது பெருந்தகையோரின் செயல்.

**பாண்டியன் :**—இன்பவல்லி! உன் உள்ளத்தை அர்த்தமற்றுப் புண்படுத்திக்கொண்டு உளறுகிருய் என்று நினைக்கிறேன்.

**இன்பவல்லி :**—பிரபு! இதோ என் உள்ளத்தைத் திறந்து காட்டிவிடுகிறேன். நான் இங்கே வருவ

தற்குமுன் உலகமே அறியாத சிறுமி. அந்தச் சேரன் என்னை வேவுகாரியாக்கி இங்கு விரட்டினான்.

பாண்டியன் :—என்ன! வேவுகாரியா ?

இன்பவல்லி :—ஆம், நான் சேர ராஜ்யத்தின் வேவுகாரி. மனம் நிறைய நஞ்சுடன்தான் இங்கு வந்தேன். உங்களுடன் பழகியபோதெல்லாம் உங்களை நோக்கிச் சிரித்தபோதெல்லாம் என் நெஞ்சில் விஷமே புகைந்துகொண்டிருந்தது. உங்களை நான் அடிமைப்படுத்தி அரச ரகசியங்களைச் சேரனுக்கு அறிவித்து அவன் இந்த நாட்டை அடிமைப்படுத்த வழி கோலவேண்டுமென்பதே எனக்குஇடப்பட்ட கட்டளை.

பாண்டியன் :—இன்பவல்லி! உன் மென்மையான இருதயத்தில் இத்தகைய நாச எண்ணங்களுக்கா இடம் இருந்தது? என்ன அநியாயம்?

இன்பவல்லி :—அந்த அநியாயத்தைச் செய்யத்தான் பிரபு நான் இங்கு அனுப்பப்பட்டேன். மனச்சாட்சியை மறந்து அநியாயமும் செய்ய முற்பட்டேன்.

பாண்டியன் :—ஆ ....... ......!

இன்பவல்லி :—ஸ்வாமி! கற்பையே ஆபரணமாகக் கருதும் கண்ணியமான குடும்பத்தில் தோன்றிய நான், உத்தரவுக்குக் கீழ்ப்படிந்துதான் வேவுகாரியாக வந்தேனே தவிர, உள்ளம் அப்பணியை விரும்பவில்லை. ஆனால், இந்தச் சதிகார வாழ்வை என்னால்

நீடித்து நடத்த இயலவில்லை. உங்கள் தூய அன்புக்குமுன் என் மனோதிடம் சின்னாபின்னமடைந்தது. மனச்சாட்சியை எதிர்த்துநிற்க இயலவில்லை.

பாண்டியன் :—இதெல்லாம் உண்மைதானா?

இன்பவல்லி :—எல்லாம் உண்மை. உங்கள் உண்மையான அன்பு, சேர அரசனால் என் உள்ளத்தில் நிரப்பியனுப்பப்பட்ட விஷத்தை எரித்துச் சாம்பலாக்கி விட்டது. யாரையும் நேசித்தறியாத என் பெண் மனம் தங்களை நேசிக்க ஆரம்பித்தது. உங்கள் அன்பின் வயப்பட்டு விட்டது, என் உள்ளம். அரசே! என்னை மன்னியுங்கள். ஒரு காலத்தில் உங்களைக் காட்டிக்கொடுக்க வந்த வேவுகாரி நான். இன்று உங்களை நேசிக்கும் ஊழியக்காரி; அன்பின் அடிமை.

பாண்டியன் :—அப்படியா?

இன்பவல்லி :—அரசே! இந்தப் பாவிக்கு நீங்கள் என்ன தண்டனை விதித்தாலும் ஏற்கத் தயாராயிருக்கிறேன். நானாக ஏதும் வஞ்சகம் செய்திராவிட்டாலும் வஞ்சகியாக இருந்தேன்.

பாண்டியன் :—இதென்ன.........?

இன்பவல்லி :—உள்ள விஷயத்தைச் சொல்லாமல் அக்கிரமங்களைப் பார்த்துக் கொண்டிருந்தது, உடந்தையாக இருப்பதற்கு அடையாளந்தானே? சுந்தரியும் வேவுகாரியே!

**பாண்டியன்** :—இந்த உலகில் மென்மைக்கு இருப்பிடமாகிய பெண் உள்ளத்தில் எவ்வளவு கொடுமை...!

**இன்பவல்லி** :—தங்கள் தாயாரும் அமைச்சரும் எங்களைச் சந்தேகித்ததை அறிந்த சுந்தரி, என் மௌனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைச் சிறையிலடைக்க வழிசெய்தாள்.

**பாண்டியன்** :—என் தாயார் குற்றமற்றவளா!

**இன்பவல்லி** :—(அழுதவாறு) ஸ்வாமி! இந்தச் சம்பவத்திற்குப் பிறகு என் மனதில் நடந்த மனப் போராட்டத்தில் நான் அடைந்த சித்திரவதையை ஆண்டவனே அறிவான். பிரபு! நானே நினைந்து நினைந்து உருகிக் கண்ணீரால் என் பாபங்களைக் கழுவி விட்டேன்.

**பாண்டியன்** :—இன்பவல்லி!.........ம், எழுந்திரு.

(வேலைக்காரன் ஓடிவருகிறான்)

**வேலைக்காரன்** :—அரசே! அரசே!

**பாண்டியன்** :—என்ன?

**வேலைக்காரன்** :—தங்கள் சகோதரியை....................

**பாண்டியன்** :—என்ன நடந்தது, சொல்!

**வேலைக்காரன்** :—நாட்டியக்காரியின் தோழி கட்டாரியால் குத்திவிட்டாள்.

**பாண்டியன் :**—*ஹா! என்ன?*

**இன்பவல்லி :**—*என்ன? சுந்தரி, குமாரியைக் கொன்று விட்டாளா?*

**வேலைக்காரன் :**—*அவளைப் பிடித்துவிட்டோம்.*

**பாண்டியன் :**—*எங்கே? எங்கே இருக்கிறாள்? குமாரி, குமாரி!*

ஓடுகிறான்.

(இன்பவல்லியும் தொடர்ந்து போகிறாள்)

திரை

## காட்சி 17

[குமாரி குத்தப்பட்டுக் கிடக்கிறாள். வேலைக் காரர்கள், வைத்தியர், சேனாதிபதி முதலியோர் இருக்கின்றனர். பாண்டியனும் இன்பவல்லியும் வருகின்றனர்.]

**பாண்டியன்:**—குமாரி! குமாரி!

**குமாரி:**—அண்ணா!

**பாண்டியன்:**—வைத்தியரே! என் தங்கையின் உயிருக்கு அபாயமில்லையே.

**வைத்தியர்:**—இல்லை, கத்திக்குத்து பலமானதல்ல. சில நாட்களில் சௌகரியமாகிவிடும்.

**குமாரி:**—அண்ணா! எனக்கு அபாயமில்லை; கவலைப் படவேண்டாம். சுந்தரியிடமுள்ள படத்தையும் கடிதங்களையும் நான் கைப்பற்ற நினைத்தபோது தான் அவள் என்னைக் குத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாள். அவற்றைப் பாருங்கள்; எல்லா ரகசியங்களும் வெளியாகிவிடும்.

**பாண்டியன்:**—எங்கே அப்பாதகி?

[இருவர் உருவிய வாளுடன் சுந்தரியை அழைத்து வருகின்றனர்.]

**பாண்டியன்:**—சுந்தரி! சுந்தரியாம்......! பெண்ணாய்ப் பிறந்த பிசாசே! எவ்வளவு துணிச்சல் உனக்கு?

**சுந்தரி:**—என் நாட்டிற்கு நான் செய்யவேண்டிய பணியில் யார் குறுக்கிட்டாலும் .........

**சேனுதிபதி** :—என்ன சொல்லுகிருய்?

**பாண்டியன்** :—சேனுதிபதி! அவளுடைய பதில் நமக்குத் தேவையில்லை. அவளிடமிருக்கும் கடிதங்களை வாங்கிப் பாருங்கள்.

[சேனுதிபதி சுந்தரியிடமிருக்கும் கடிதங்களை வாங்கிப் பார்க்கிருர்.]

**சேனுதிபதி** :—அரசே! இந்தப் படத்தைப் பார்த்தீர்களா?

**பாண்டியன்** :—பாண்டி நாட்டின் படமல்லவா!

**சேனுதிபதி** :—ஆம், பிரபு, பாண்டி நாட்டின் பாதுகாப்பற்ற இடங்கள், எதிரி படையெடுத்து வரவேண்டிய வழிகள் எல்லாம் குறிக்கப்பட்டிருக்கின்றன.

**பாண்டியன்** :—ஆகா! எவ்வளவு முன்னேற்பாட்டுடன் கூடிய துணிகரமான செயல்! அவளிடமிருக்கும் மற்ற கடிதங்களையும் பாருங்கள்.

**சேனுதிபதி** :—அரசே! தங்களைக் கைதுசெய்யவிருந்த வேளையில் பாண்டிமாதேவியும் அமைச்சரும் சேர்ந்து அக்காரியம் நடைபெறமுடியாமல் செய்துவிட்டனரென்றும், படைவீரர்கள் ஓடிவிட்டனரென்றும்..........

**பாண்டியன்** :—எவ்வளவு கொடிய சோதனையிலிருந்து தற்செயலாகத் தப்பினேன்! என்னைக் காப்பாற்றியதற்கு நான் அளித்தபரிசு சிறைத் தண்டனையா?

**சேனுதிபதி** :—இன்பவல்லி தங்கள் மையலில் விழுந்து தான் வந்த வேலையை மறந்துவிட்டதாகவும்

அவளை விஷமிட்டுக்கொல்ல அனுமதி வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

**பாண்டியன்** :—ஆகா! இவளுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்! எவ்வளவு பயங்கரமான செயலில் ஒரு பெண் இறங்கியிருக்கிறாள்! ஒரு சாம்ராஜ்யத்தையே நாசமாக்கிவிட இரண்டு பெண்களை ஏவியிருக்கிறான், சொந்த பலத்தில் நம்பிக்கை இல்லாத சேரன்! சுந்தரி! இது மறலியுடன் போராடும் முயற்சி என்பதை அறியவில்லை நீ!

**சுந்தரி** :—அறிந்துதான் ஆயத்தமானேன். இன்பவல்லியின் துரோகத்தால் நான் இன்று பிடிபட்டு விட்டேன். என் நாட்டிற்கு நான் செய்யும் பணியில் எந்த ஆபத்துக்கும் தயாராகவே இருந்தேன். என் வேஷம் கலையுமானால் இதற்கு என்ன தண்டனை கிடைக்குமென்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும்.

**பாண்டியன்** :—மரண தைரியம்!

**சுந்தரி** :—நான் அழிவதால் பெரியதொரு நஷ்டத்தை அடைந்துவிடாது என் நாடு. மகத்தான ஒரு நன்மைக்கு நான் பலியாவதில் அமரத்துவ பாக்கியம் கிடைக்குமானால் அதைவிடப் பெரும் பேறு வேறென்ன இருக்கிறது?

**பாண்டியன்** :—என்ன துணிகரமான பேச்சு! இவளை உரிய இடத்தில் சேர்ப்பித்துவிடும்.. ...பிறகு......

[ஒரு ஒற்றன் ஓடிவருகிறான்.]

**ஒற்றன்** :—அரசே! சேரன் நம் நாட்டின்மீது படையெடுத்திருக்கிறான்.

**பாண்டியன்** :—சேரஞ?

**ஒற்றன்** :—ஆம் அரசே!

**பாண்டியன்** :—உம், சுந்தரி கொடுத்திருக்கும் தகவல் களைக்கொண்டு..........சரி யுத்தப் பிரகடனம் என்ன?

**ஒற்றன்** :—அரசே! சேர ராஜ்யத்தின் நாட்டியராணி யான இன்பவல்லியைத் தாங்கள் தூக்கிக்கொண்டு வந்துவிட்டதாக........

**பாண்டியன்** :—அப்படியா? யுத்தப் பிரகடனத்திற்கு நல்ல காரணம் கண்டுபிடித்திருக்கிருன் சேரன்!... ......சேனுதிபதி! என்ன யோசிக்கிறீர்?

**சேனுதிபதி** :—சேரன் எதிர்பாராத வகையில் படை யெடுத்திருக்கிருன். அவன் படை பலம்......

**இன்பவல்லி** :—பிரபு! சேரனின் படைபலம் எனக் குத் தெரியும்.

**பாண்டியன்** :—இன்பவல்லி!

**இன்பவல்லி** :—அரசே! அவனை வெல்வது எளிது. சேரனின் படைபலத்தைப்பற்றிய புள்ளி விவரங் கள், அவர்கள் தாக்குதலைப்பற்றிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் சுந்தரிமூலம் நான் அறிந்திருக் கிறேன். நான் செய்த துரோகத்திற்கு இதாவது சிறு பிராயச்சித்தமாக முடியுமாஞல் நான் சற்று மனநிம்மதியடைய முடியும்.

திரை.

## காட்சி 18

சிறைக்கூடத்திற்கு முன்னால்:

[தேவி, அமைச்சர், பாண்டியன், சேனாதிபதி]

**பாண்டியன்** :—அம்மா!..........அம்மா!!........என்னை மன்னிப்பீர்களா? அம்மா! மதி இழந்து மகத்தான தவறுகள் பல புரிந்து விட்டேன். மாயத்திரை அறுந்து விழுந்தது. மதுவை மறந்தேன். அந்த காரம் நீங்கியது. என் கண்கள் திறக்கப்பட்டன.

**தேவி** :—(நகைப்பு) அப்பா! உன் கண்கள் திறக்க, உன் கண்களிலிருந்த மாசு நீங்க, உன் தங்கையின் ரத்தப் பெருக்கு தேவையிருந்தது. இப்பொழுதாவது...............

---

**பாண்டியன்** :—அமைச்சரே! என்னை மன்னியுங்கள்.

**அமைச்சர்** :—அரசே! அவை காலத்தின் விளைவு...... மறந்து விடுங்கள்......

(போர்முரசு கொட்டும் ஒலி கேட்கிறது.)

**அமைச்சர்** :—என்ன! போர் முரசம் கேட்கிறது.

**பாண்டியன்** :—சேரன் படையெடுத்து வந்துவிட்டான்.

**தேவி** :—போரா?

**பாண்டியன்** :—இனிதான் ஆரம்பமாக இருக்கிறது. சேரன் ஏதோ ஏமாந்த சமயத்தில் தாக்கிவிட்டதாக எண்ணி இருக்கிறான்.

**அமைச்சர்** :—தாங்கள் எதிர்பார்த்ததுதானா?

பாண்டியன் :—ஆம், இந்தப் போருக்கு இன்பவல்லி எவ்வளவு காரணமுள்ளவளாக இருந்தாளோ நம் வெற்றிக்கும் அவ்வளவு காரணமுள்ளவளாகவே..

தேவி :—நீ சொல்வது விளங்க வில்லையே!

பாண்டியன் :—வாருங்கள். அரண்மனைக்குச் சென்ற பின் விவரமாகக் கூறுகிறேன்.

தேவி :—சேனாதிபதி! அறியாமை காரணமாகப் போரை ஆரம்பித்திருக்கிருன் சேரன். நிரபராதிகளான வீரர்கள் பலியாவதா? முடிந்தவரை எதிரிப் படையினரை அழித்துவிடாமல் கைது செய்யும்படி நம்முடைய படை வீரர்களுக்குக் கட்டளை இடுங்கள்.

சேனாதிபதி :—அப்படியே! தங்கள் ஊழியனாக இருக்கிற ஒரே காரணத்தால் இப்பொழுது தங்களைப் பாராட்டிப் புகழவேண்டுமென்ற என் விருப்பத்தை வெளியிட முடியவில்லை அம்மணி!

[போகின்றனர்.]

திரை.

## காட்சி 19

பாண்டியன் சபை:

[பாண்டியன், தேவி, குமாரி, அமைச்சர், சேனாதிபதி முதலியோர் அமர்ந்துள்ளனர். இன்பவல்லியும் அச்சபையில் அமர்ந்துள்ளாள்.]

[சேரன் நிற்கிறான். இருமருங்கிலும் இரண்டு வீரர் உருவிய வாளுடன் நிற்கின்றனர்.]

**பாண்டியன் :**—சேரனே! வீணே படையெடுத்து எமக்குச் சேதம் விளைவித்த குற்றத்தை உம்மீது சாட்டுகிறேன். என்ன சொல்லுகிறீர்?

**சேரன் :**—முயற்சி தோல்வியடைந்து விட்டது என் பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

**பாண்டியன் :**—உம், குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டீர் போலும்! உம்முடைய அறியாமை காரணமாகச் சேரநாட்டின் வீரர்கள் பலரை இங்கே பலி கொடுத்து விட்டீர்.

**சேரன் :**—என் முயற்சிக்கு அறியாமை என்று பெயர் கொடுப்பது ஒரு சுத்த வீரனுக்கு அழகல்ல.

**பாண்டியன்:**—உம், யுத்தம் காரணமாக உம் நாட்டு மக்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தனர். அவற்றிற்கெல்லாம் நீரே காரணமல்லவா? உம் நாட்டு மக்கள் இந்தக் குற்றத்தை உம்மீது சுமத்துவதற்கு உரிமையுடையவர்களல்லவா?

**சேரன் :**—இது உங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயம்.

இன்பவல்லி :—பிரபு ! ஒரு வேண்டுகோள்.

பாண்டியன் :—இன்பவல்லி என்ன?

இன்பவல்லி :—அரசே! சேரர் போரில் தோற்ருர். உங்களிடம் கைதியாக நிற்கிருர். போர் முறைப்படி சேர ராஜ்யம் இப்பொழுது உங்களுடையதுதான். நீங்கள் விரும்பினுல் சேர மன்னரைச் சிறையிலடைக்கலாம், சித்திரவதைகூடச் செய்யலாம். ஆனுல்.........

பாண்டியன் :—என்ன ?

இன்பவல்லி :—இவரை மன்னித்து விடுப்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன் பிரபு. நிபந்தனையின்றி அவரை விடுதலை செய்து விடுங்கள் அரசே! உங்கள் வீரம் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

பாண்டியன் :—மன்னிப்பா !

சேரன் :—மன்னிப்பா ! துரோகி—

[இடுப்பில் மறைத்து வைத்திருந்த கட்டாரியை எடுத்து இன்பவல்லிமீது எறிந்து விடுகிருன்]

இன்பவல்லி :—ஹா ! [கீழே விழுகிருள்]

பாண்டியன் :—பாவி ! என்ன காரியம் செய்தாய்?

[சபையிலுள்ளோர் துடிக்கின்றனர். தேவி இன்பவல்லியைத் தொட்டுப் பார்க்கிருள்.]

தேவி :—இறந்து விட்டாள்.

பாண்டியன் :—ஹா ! இன்பவல்லி ! இந்த நன்றி கெட்ட அயோக்கியனுக்கா மன்னிப்பு? இவனைக் கொண்டுபோய்ச் சிறையில் அடையுங்கள்.

[காவலாளிகள் சேரனை இழுத்துச் செல்கின்றனர்.]

திரை.

முற்றிற்று.

காமராசர் ... அவ்வை ...க. சண்முகம் நூலகம்.

# காதற் கனி

இலக்கியச் சிறுகதைகள்

தி. சி. குழந்தைவேலன்

## பத்திரிகைகள் பாராட்டுகின்றன!

★ **The Hindu**: This is an adaptation in a narrative form of the ancient Tamil Sanga Composition of "Ainguru - Nooru" dealing with love songs. The style is in pleasing prose - poetry form and the manner is arresting.

★ **சுதேசமித்திரன்**: 'சங்க நூல்களில் ஒன்ருன ஐங்குறு நூற்றிலிருந்து காதல் சுவை ததும்பிய சில செய்யுட்களை எடுத்து கதை ரூபத்தில் அமைத்திருக்கிறுர் இப்புத்தகத்தின் ஆசிரியர். பண்டைக்காலச் செய்யுட்களின் கருத்துக்களை விளக்க இதைவிட நல்ல முறையைக் கையாள முடியாது. ஆசிரியர் மிகவும் எளிய நடையில் கதைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறுர். ......சங்கச் செய்யுட்களைப் பொதுமக்களுக்கு இந்த வழியில் தான் புகட்ட வேண்டும். இப்புத்தகம் தமிழர்கள் படிக்க வேண்டிய மிகமிக அவசியமான புத்தகங்களில் ஒன்று.'

★ **ஆனந்த விகடன்**: '...தமிழ் இலக்கியங்களில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் இப்பிரசுரத்தை விரும்பி வரவேற்பார்கள்!'

★ **சக்தி**: 'நல்ல தமிழ். நல்ல புத்தகம்.'

★ **கலைவாணி**: 'தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறுபடாத முறையில் கற்பனை அமைந்திருக்கிறது. கதை சொல்லும் நடை மிக்க எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கிறது. யாவரும் படிக்கலாம்; பலமுறை படிக்கலாம். நடைப் போக்கு நம்மை வசீகரிக்கிறது. இன்னும் ஒன்று: தூய்மையான தமிழ். கதை சொல்லிக்கொண்டு போகும்போதே வேறுபல இலக்கியங்களிலிருந்து நல்ல கருத்துக்களையும் வர்ணனைகளையும் எடுத்துக் கூறுகிறுர் ஆசிரியர்.'

★ **ஹனுமான்**: 'காதலை, பண்டைய இலக்கியங்களில் எப்படி விவரித்திருக்கிறுர்கள் என்று தெளிவுபடுத்த விரும்பிய ஆசிரியர், ஐங்குறுநூறு என்னும் சங்க நூலிலிருந்து சில காதற் காட்சிகளை எடுத்துக் கதைஉருவில் எழுதியிருக்கிறுர். பேராசிரியர் திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்துள்ள இந்நூல், எல்லோரும் படித்து இன்புறக்கூடியதாக இருக்கிறது.'

★ **விமர்சனம்**: 'தமிழ்மொழி வளர்ச்சியை விரும்பும் ஒவ்வொரு தமிழ்மகன் கையிலும் இப்புத்தகம் திகழவேண்டியது அவசியம். பழந் தமிழின் பாங்கு இந்நூலில் எளிய நடையில் எடுத்துக் காட்டுகிறது.'

# சர விளக்கு

ஆசிரியர் : 'சுகி'

நகைச் சுவை
இலக்கியச் சுவை
நிரம்பிய
இனிய கட்டுரைகள்

★ 'சுகி', மக்கள் எண்ணப் போக்கில் துவண்டு போகாமல் நிமிர்ந்துநின்று ஏறிட்டுப் பார்ப்பதில் இணையற்று விளங்குகிறார் !

★ கருத்து வெள்ளத்தில் கலங்கோடாமல் எதிர்நீச்சு நீஞ்சி எக்களிக்கிறார் !

★ புதுமை வழிகளில் புகுந்து மகிழ்கிறார் !

★ இன்னும்..........................................சமூக உடம்பில் காணப் புரையோடிய புண் அறுத்துக் குணப்படு மருத்துவராக மிளிர்கி ஆனல், நோயாளி க யழும்படி அல்ல; சிரி மகிழும்படி !

—தி. சி.

விலை ரூ. 2/-
(தபால் செலவு தனி)

**மணி மன்றம்**
தமிழ் நூல் வெளியீட்ட
மதுரை ரோடு, திருச்சிராப்ப